உ

கணபதி துணை

நகுலேசப் பிரசாத சித்திரஸ்து

கீரிமலைச் சிவன்கோயிற் சிறப்பு.

யாழ்ப்பாணத்துக்
கோப்பாயைச் சார்ந்த நீர்வேலியில்
வித்துவானும்
பீதாம்பரம்பிள்ளை புத்திரரும்
சைவப்பிரகாச பாடசாலை உபாத்தியாயருமாகிய

சபாபதிப்பிள்ளை

செய்தது.

இது
டிஸ்திரிக்கோட்டு நியாயதுரந்தரர்
ம. ள. ள. ஸ்ரீ பொ. சின்னக்குட்டிப்பிள்ளை
அவர்களால்

யாழ்ப்பாணத்து வண்ணைநகர்
மெய்ஞ்ஞானப்பிரகாச யந்திரசாலையில்
அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

விஷு ௵ மார்கழி ௴

நூல் நிலையம்,
சென்னை-600090.

கீரிமலைச் சிவன்கோயிற் சிறப்பு

முகவுரை.

எல்லா அறிவும் எல்லா முதன்மையும் உடையவராயப், பாலில் நெய்போல எங்கும் வியாபித்தவராய் உள்ள சிவபெருமான், தயிரில் நெய்போல விளங்கி நின்று ஆன்மாக்களுக்கு அருள் செய்தற்குரிய சிறந்த இடமாயுள்ளது திருக்கோயில்.

சைவசமயிகள் அர்த்தோதயம், மகோதயம், சூரிய சந்திர கிரகணம் முதலிய விசேஷ புண்ணிய காலங்களிலே விதிப்படி ஸ்நானஞ்செய்து பாவங்களை நீக்கிக் கொள்ளுதற்குத் தகுந்த புண்ணிய தீர்த்தத்தைச் சமீபத்தில் உடையதாய், அப்படியே ஸ்நானஞ் செய்தவர்கள் வலஞ்செய்து வணங்கித் துதித்துத் தியானித்து இட்ட சித்தி முத்திகளைப் பெற்றுக்கொள்ளுதற்கு உரிய சிவலிங்கப்பெருமானையும், மற்ற மூர்த்திகளையும் தன்னிடத்திலே கொண்டதாய் உள்ளது திருக்கோயில்.

சிவராத்திரி விரதம் சோமவார விரதம் முதலிய விரதங்களை அனுட்டிப்பவர்கள், அவ்வக்காலங்களிலே விதிப்படி ஸ்நானஞ்செய்து விசேஷபூசை செய்வித்துத் தரிசித்தும், கிரமமாகச் சிவபுராணங்களைப் படிப்பித்துக் கேட்டும் சித்தி முத்திகளைப் பெற்றுக்கொள்ளுதற்குச் சிறந்த இடமாயுள்ளது திருக்கோயில்.

உ கீரிமலைச்சிவன்கோயிற் சிறப்பு.

முற்காலங்களிலே இருந்த முனிவர்களாலாயினும் பெரியோர்களாலாயினும் புகழ்ந்து பாடப்பட்டதாயும் அவர்கள் மெய்யன்போடு வழிபட்டுச் சித்தி முத்திகளை அடைந்துகொள்ளப் பெற்றதாயும் உள்ள கோயிலே எல்லாவற்றினுஞ் சிறந்த கோயிலாகும்.

இவ்வளவு பெருஞ்சிறப்பினையுடைய கோயில் ஒன்றாவது எந்த நாட்டில் இல்லையோ அந்த நாடு அளவில்லாத மாட்சிமைகளை உடையதாயினும் அறிவுடையோர்களாலே சிறப்புடையதென்று கொள்ளப்படாது காடென்றே தள்ளப்படும்.

முற்காலத்திலே நம்முடைய யாழ்ப்பாணத்திலே கீரிமலையிலே அப்படிப்பட்ட பெருஞ்சிறப்பினதாகிய ஒரு திருக்கோயில் இருந்தது; அது போர்த்துக்கேசர் அரசாண்ட காலத்திலே அவரால் இடிபட்டு அழிந்தது. பின்பு அத்திருக்கோயிலைக் கட்டுவிக்கும்படி காலந்தோறும் அநேகர் முயன்றும் பொருள் காலம் முதலியன வாயாமையால் விட்டுவிட்டார்கள்.

ஸ்ரீலஸ்ரீ. நாவலர் அவர்களுடைய முயற்சியினாலே, மாவிட்டபுரத்திலே இருந்த பிரசித்திபெற்ற ஆதிசைவராகிய சபாபதிதேசிகருடைய மரபிற் பிறந்த சற்குண சம்பன்னராகிய **ஸ்ரீலஸ்ரீ. கார்த்திகேயக் குருக்களும்** புத்திரரிருவரும் விடாமுயற்சியுடையவர்களாய்ச் சென்ற விக்கிரம வருஷம் கீரிமலையிலே சிவன்கோயில் கட்டுவிக்கும்படி ஆரம்பித்துச் சைவசமயிகள் அன்போடு கொடுக்கும் பொருள்கொண்டுந் தம் பொருள் கொண்டுஞ் செவ்வையாக வேலை செய்விக்கிறார்கள்.

நமமுடைய இலங்கையிலுள்ள சைவசமயிகள் எல்லாரும் அக்கீரிமலைச் சிவன்கோயிலின் சிறப்புக்களை உள்ளபடி அறிந்து அசசிவபுண்ணியத்துக்கு மிகுந்த உபகாரிகளாய் இருக்கும்பொருட்டு, முன்னரே **சிவ. சங்கரபண்டிதர்** அவர்களாலே சம்ஸ்கிருத தக்ஷிண கைலாச புராணத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட சரித்திரங்களுள்ளும் பிறவற்றுள்ளுஞ் சிலவற்றை மிகச் சுருக்கி இங்கே ஒருநூலாகச் செய்து காட்டுகின்றேன்.

சரித்திரச் சுருக்கம்.

அகண்ட பரிபூரண சச்சிதானந்த ஸ்வரூபியாகிய சிவபெருமானுடைய திவ்வியப்பிரசாதத்தினாலே படைத்துக் காக்கப்பட்டிருக்கின்ற பூலோகத்திலே நாவலந்தீவிலேயுள்ள பரதகண்டத்துக்குத் தெற்கே இலங்கையென்று பெயர்பெற்ற இந்தீவு உள்ளது. இது முன்னே வாயுவினாற் பிடுங்கியெறியப்பட்ட மகாமேருசிகரங்கண் மூன்றனுள் இரண்டாகிய திருக்கேதீச்சரம் திரிகூடம் என்பவற்றைத் தன்மாட்டுக் கொண்டிருத்தலால் ஈழமண்டலம் என்னும் பெயருமுடையது.

[ஈழம்—பொன்.]

பூமியின் சரீரத்தினுடைய இடைநாடி இலங்கையிலும் பிங்கலை நாடி இமயகிரியிலும் நடுவாகிய சுழுமுனை நாடி தில்லைவனத்திலுஞ் சேர்ந்திருக்கும். இவ்வுண்மையை; "இலங்கைநே ரிடைபோ மற்றை, யிலங்குபிங் கலையா நாடி நலங்கிள ரிமைய நேர்போ நடுவுபோஞ் சுழுனை நாடி" என்னுங் கோயிற்புராணத் திருவிருத்தத்தானுந் தெளிக.

௬ கீரிமலைச் சிவன்கோயிற் சிறப்பு.

இவ்விலங்கையிலே தேவாரப்பதிகம பெற்றவைகளா கிய திருககோணமலை திருககேதீச்சரம என்னுஞ் சிவஸ் தலங்கள் இரண்டும் புராணோக்தமாகிய நகுலேச்சுரம் சி வச் சோதிஷ்பாதமலை என்னுஞ் சிவஸ்தலங்கள் இரண் டும் சோதிஷ்காயகிரி கந்தகிரி கணடகீ வடகாந்தாரம் என்னுஞ் சுப்பிரமணியஸ்தலம் மூன்றும வேறுபல தல ங்களும நகுலேச தீர்த்தமும சிவச்சோதிஷ்பாதகிரியின் சிவபாத சின்னத்தின் விரல்களிலிருந்து வெளிப்பட்டுக் கிழக்கே செல்லுகின்ற மாணிக்க கஙகையும் மேற்கே செல்லுகின்ற காவேரியென்றும பெயர்பெற்ற பாலிகங் கையும் வடக்கே செல்லுகின்ற மாபலிகங்கையும் இரு க்கின்றன. இத்தீவிலே முற்காலத்திலே தேவர்களால மூன்றுகோடி சிவாலயங்களும விபீஷணனால் ஆறு கோடி சிவாலயங்களும் உண்டுபண்ணப்பட்டிருந்தன.

[இவற்றுள் நகுலேச்சுரம், கீரிமலைச சிவன்கோயில்.]

முன்னொருகாலத்திலே கீரிமுகமுடையவராகிய நகுல முனிவர் என்பவர் முசுகுந்த சக்கிரவர்த்தியினுடனே இவ்விலங்கையில் வந்து நகுலேச தீர்த்தத்திலே ஸ்நான ஞ்செய்தமையாற் கீரிமுகம் மாறப்பெற்று நகுலேசரைச் சேவித்துக்கொண்டு நகுலகிரியின் குகையிலே நெடுங்கா லம் வாசஞ்செய்தார். அந்தக்காரணத்தினாற்றான் அந்த மலை நகுலகிரி என்றும் அதைசசார்ந்த கோயில் நகுலே ச்சுவரம என்றும் அங்கே இருந்தருளிய சிவலிங்கப்பெ ருமான் நகுலேசா என்றும் அங்குள்ள புண்ணிய தீர்தத ம் நகுலேச தீர்ததம் என்றும் வழங்கப்பட்டு வருதலாயி ற்று.

அந்த நகுலேச தீர்த்தமானது, நகுலகிரிக்கு மேற்குப் பக்கத்திலே தெற்கிலூறுகின்ற சுத்த சலமும் வடக்கிலு

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600 090

மாள உபபுச்சலமுங் கலந்து, கிழக்கு [illegible] முஞ் சத்திரூபமுமாயிருக்கின்ற இயல்பினாலே மிகச்சிறந்த திவ்விய தீர்த்தமாகும் இது சங்கா சமுத்திர சங்கமம் என்னும் பெயருமுடையதாகும். இத்தீர்த்தத்திலே காலந்தோறும் அளவில்லாத சைவசமயிகள் விதிப்படியே ஸ்நானஞ்செய்து வேண்டிய சித்திகளைப் பெற்று வருகிறார்கள்.

முன்னே சுப்பிரமணியக்கடவுள் சூரபன்மனைக் கொன்ற பின்பு சோதிஷ்காம கிரியிலே சிலகாலம் இருந்து பின்பு சயந்திபுரம், திருப்பரங்கிரி, ரத்நசைலாசம், உத்தர கந்தகிரி, உபலகிரி, வல்லிகிரி என்பவற்றின் முறையே போய்த் தங்கிப் பின்பு வேதாரணியத்தில் வந்து கடல் கடந்து நகுலேசசுவரத்தை அடைந்து அங்கே தேவர்கள் செய்த பூசையை ஏற்றருளிச் சித்தர்களுக்கும் அருள்செய்து பின்னுஞ் சோதிஷ்காமகிரியிலே போய் வாசஞ் செய்தருளினார்.

முற்காலத்திலே இராவணன், கோணேசரையுந் தேவியையுஞ் சாமகானத்தால் துதிக்கும்படி, கையிலே தரித்திருந்த அற்புதமாகிய வீணையைச் சுசங்கீதனென்னுங் கந்தருவன் கண்டு கவர விரும்பிச் சமயம் பார்த்திருந்து இராவண சங்காரகாலத்திலே அதைக் கவர்ந்து கொண்டு மனுடரூபமுடையவனாகி நகுலகிரியிலே வந்து சங்காசமுத்திர சங்கம தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து, நகுலேச சிவனைப் பூக்களால் அருச்சித்துத் தோத்திரஞ்செய்து வீணாகானம் பண்ணினான். நகுலேச சுவாமி பிரீதியுற்று, வெளிப்பட்டுச் 'சுசங்கீதனே! நீ வீணாபாணியாய் நின்று இங்குப் பாடினமையால் இவ்விடம் வீணாபாணம் எனப்படுக இவ்விடத்தின் சமீப

லே பல புண்ணிய க்ஷேத்திரங்கள் இருக்கின்றன இக்காடுகளை வெட்டிப் பட்டணமாக்கி வீணுபாணபுரம் என்னும் பெயரோடு வழங்கப்பண்ணு" என்று சொல்லி மறைந்தார்.

சிவனுடைய ஆஞ்ஞையின்படியே சுசங்கீதனென்றும் வீணுபாணியென்றும் பெயர்பெற்ற கந்தருவன், காடு வெட்டிப் பட்டினமாக்கி அழிந்த கோயில்களைப் புதுக்கிப் பல குடிகளையும் இருத்தி நகுலேசர் அனுமதி பெற்றுத் தன் புரத்திற்குப் போயினன்.

கலியுகத்திலே உ,0௱௯ம் ஆண்டிலே விங்கதேசத்திலிருந்த விசயராசன் என்பவன், காசியிற் சென்று விசுவநாத சுவாமியினுடைய அருளினுலே இலங்கையிலே வந்து இராச்சியஞ் செய்யத் தொடங்கினபோது, கிழக்கே கோணேசர் கோயிலையும் வடக்கே நகுலேசர் கோயிலையும் மேற்கே கேதீசர் கோயிலையும் புதுக்கித், தெற்கே மாத்துறையிற் சந்திரசேகரர் கோயிலையுங் கட்டுவித்து, நகுலேச்சுவரத்துக்குக் கிழக்கேயுள்ள கதிரையாண்டவர் என்னுஞ் சுப்பிரமணியருடைய கோயிலையும் புதுக்கிக்கொண்டு இராச்சியம்பண்ணினுன்.

அவனுடைய சந்ததியிற் பிறந்த உக்கிரசிங்கனுடைய காலத்திலே திசையுக்கிர சோழமகாராஜாவினுடைய மகளாகிய மாருதப்பிரவல்லியென்பவள், குன்மரோகால் வருந்திப், பலதலங்களுக்கு யாத்திரை செய்து, நீங்கப்பெருது, சாந்தலிங்க முனிவருடைய போதனையினுலே, இந்த நகுலேச்சுவரத்தில் வந்து, நகுலமுனிவரைக் கண்டு வணங்கித், தன் காரியத்தை அறிவித்தாள். அது கேட்ட நகுலமுனிவர், அவளை நோக்கிச் சொல்லிய வசனம் வருமாறு:—

“எனக்கு வேண்டிய காரியம் இந்தஸ்தலத்திலே சித்தியாகும் இந்தஸ்தலத்தின் மகிமையைக் கேள். கிருதயுகத்திலே சிவபெருமான் தேவிக்கு ஸ்நானஞ்செய்தற்பொருட்டு இத்தீர்த்தத்தை உண்டாக்கினார்; இதிலே தேவர்கள் முனிவர்கள் முதலாயினோர் அக்காலத்தில் வந்து ஸ்நானஞ்செய்து புண்ணியவான்களாயினமையாலே இது புண்ணியதீர்த்தம் எனப்படும்

அக்கிருதயுகத்திலே முசுகுந்த சக்கிரவர்த்தியுடனே நானுங் கூடவந்து இப்புண்ணிய தீர்த்தத்திலாடி நகுலேச தரிசனமுஞ் செய்துகொண்டு, இங்கிருந்து என் கீரிமுகம் மாறப்பெற்றேன். அதனால், இக்கடவுளுக்கும் இத்தீர்த்தத்துக்கும் இம்மலைக்கும் என்பெயரே வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த யுகத்திற்றானே சுப்பிரமணிய சுவாமி இங்கேவந்து நகுலகிரியின் சமீபத்திலே ஒரு ஆலயத்திலே சில நாளிருந்து போனார்.

திரேதாயுகத்திலே ஒரு கந்தருவன் இங்கே வந்து ஸ்நானஞ்செய்து இதனருகிலேயுள்ள காட்டை வெட்டி வீணாபாணம் என்னும் பட்டணமாக்கி இக்கோயிலையும் புதுக்கிவிட்டுப் போனான்.

துவாபரயுகத்திலே நளராசன் கோணேசரைச் சேவித்துக்கொண்டு இங்கேவந்து நகுலேசருடைய கிருபையினாலே கலிபீடை நீங்கப்பெற்றான்.

அதன்பின்பு அருச்சுனன் இங்கே வந்து தீர்த்தமாடி நகுலேச தரிசனஞ் செய்து நகுலேசரிடத்திலே வேண்டிய வரங்களைப் பெற்றுப் போனான்.

அ கீரிமலைச் சிவன்கோயிற்சிறப்பு.

இன்றும் இதில் அநேகர் வந்து இஷ்ட சித்திகளை அடைகிறார்கள்" என்பதாம்.

இப்படியே அவர் சொல்லியருளிய வசனத்தைக் கேட்டு, அம்மாருதப்பிரவல்லி தீர்த்தஸ்நானமுஞ் சுவாமி தரிசனமுஞ் செய்துகொண்டு சிலகாலம் அங்கேயிருந்து தன்னுடைய குன்மநோயேயன்றிக் குதிரைமுகமும் நீங்கப் பெற்றாள்.

அவள் தன்குதிரைமுகம் நீங்கப்பெற்ற காரணத்தாற் கோயிற்கடவை என்னுங் குறிச்சிக்கு மாவிட்டபுரம் எனப் பெயரிட்டு அங்கே ஒரு சுப்பிரமணியர் கோயில் கட்டுவித்துப் பிரதிட்டை செய்வித்தாள்.

இச்சுப்பிரமணியர் கோயிலும் முன்னேயே விசயராசனாற் புதுக்குவிக்கப்பட்ட நகுலேசர் கோயிலும் பிறவும் போர்த்துக்கேசர் காலத்தில் அவரால் இடிக்கப்பட்டன.

பின்பு அங்கிலேயர்காலத்திலே ஏறக்குறைய நூறுவருஷங்களின் முன்னே வெகுசனங்களால் நன்குமதிக்கற்பாடு உடையராயிருந்த சபாபதிதேசிகராற் சுப்பிரமணியர் கோயில் கட்டுவிக்கப்பட்டது.

இச்சபாபதிதேசிகர், முன்னே மாருதப்பிரவல்லியினால் வடநாட்டிலிருந்து அழைப்பிக்கப்பட்டு வந்திருந்த ஆதிப்பிராமணருடைய மரபிலே பிறந்தவர்.



முகவுரை.

இலங்கையின் வாழுஞ் சைவசமயிகளே!

இதுகாறுங் கூறியவாற்றால் நம்முடைய இலங்கை புண்ணியபூமியென்பதும் புண்ணிய தீர்த்தங்களை உடையதென்பதும் மிகச்சிறந்த தீர்த்த விசேஷத்தாற் தலவிசேஷமும் ஒருங்கு சேரப்பெற்றமையால் உருத்திரலிங்கவரர் பிரதிஷ்டை செய்யப்பட்டதும் பெறப்பட்டனவன்றோ!

இங்ஙனமாகப் பரதகண்டத்தில் வாழ்பவர்களுள்ளே அஞ்ஞானிகளாகிய சிலர் நம்முடைய இலங்கையை "இராக்ஷஸபூமி! இராக்ஷஸபூமி!!" என்று இகழ்ந்து திரிகின்றார்களே!! ஐயையோ! கரன் தூஷணன் முதலிய அரக்கத்தலைவர்கள் பதினாலாயிரம் அரக்கச்சேனைகளோடு இருந்த ஜநஸ்தானம் பரதகண்டத்தின்கண்ணதே என்பதை அவர்கள் இராமாயணத்திலாயினுங் கண்டிலர்போலும்; கண்டால் இங்ஙனங் கூறமாட்டார்களே.

தற்காலத்திலே பரதகண்டத்திலும் நம்முடைய இலங்கைதானே கல்வியறிவு, பேச்சுத்திருத்தம், பிரசங்கம், சிவபுராணபடனம், வித்தியாசாலைப் பெருக்கம், சமாசார பத்திரிகை நிகழ்ச்சி முதலியவைகளினால் மிகச்சிறந்து விளங்குவதை அறியாதவர்கள் யாவர்! இதை மறுக்க வல்லவர் யாவர்!!

இவ்வளவு சிறப்புடைய இலங்கையிலுள்ளதாகிய நமது யாழ்ப்பாணத்திலே, மேலே சொல்லியபடி பலபெரியோர்களாலே புகழ்ந்து சேவிக்கப்பட்டதாய், அதி திவ்விய தீர்த்தத்தோடு கூடியதாய் இருந்த நகுலேச்சுவரம் என்னுங் கீரிமலைச் சிவன்கோயில் எங்களுக்கெல்லாம்

ம கீரிமலைச் சிவன்கோயிற்சிறப்பு.

இன்றியமையாப் பெருஞ்சிறப்பினதென்பதும், அது போர்த்துக்கேசரால் இடிபட்டழிந்தது பெருங்குறை யாகும் என்பதுஞ் சத்தியமாகுமே.

தற்காலத்திலே, மாவிட்டபுரத்துள்ள ஸ்ரீமஸ்ரீ. கார்த்திகேயக்குருக்களும், அவர்களுடைய புத்திரராகிய ஸ்ரீமத். சபாபதிக்குருக்கள், ஸ்ரீமத். தியாகராசக்குருக்கள் என்பவர்களும் அக்கீரிமலையிலே சைவப்பிரபுக்களுடைய உதவி கொண்டு சிவன்கோயிலைக் கட்டுவிப்பது பெரும் பாக்கியமன்றோ

அன்பர்களே !

மேற்சொல்லிய குருக்கண்மார் அத்திருப்பணியை விடாமுயற்சியோடு நடத்துகின்றார்கள்; வேண்டியவிடத்துத் தம்பொருள்கொண்டும் நடத்துகின்றார்கள்: ஆதலால், நாம் உபகரிக்கும் பொருளில் அணுவளவாயினும் அவர்கள் அபகரித்துக்கொள்ளமாட்டார்கள் என்று நன்றாகத் துணிந்துகொள்ளக்கடவீர்கள். அப்படி அபகரித்துக்கொள்ளாமைக்கு அவர்கள் விரைவில் வெளிப்படுத்தும் ஆவேதன பத்திரங்களே சாக்ஷியாகும் என்று உணர்ந்துகொள்ளக்கடவீர்கள். இப்படித் துணிந்து நீங்கள் எல்லீரும் உலோபமின்றி அன்போடும் இயன்ற இயன்றளவு பொருள் உதவி செய்யக்கடவீர்கள்.

திருச்சிற்றம்பலம்.

சன்றுகம

ம. ா. ா. ஸ்ரீ. அ. குமாரசுவாமிப்பிள்ளை பாடிய

நகுலேச்சுவரதசகம்.

வெண்பா.

கங்கையொடு திங்களரவக் காட்டுஞ் சடைமுடியார்
மங்கைநகு லாம்பிகையை வைத்தவிடப்-பங்குடையார்
சீரிமலை வாசர் சிவருநகு லேசரடி
வாரிசத்திற் கன்புசெய்வாம் மன்.

கட்டளைக் கலித்துறை.

சங்கம சாகர புண்ணிய தீர்த்தஞ் சமீபமுறத்
துங்க மிருந்துள தெத்தல மோவித் துவீபதனிலே
பங்கம தின்னகு லாம்பிகை யாம்பெயர்ப் பாவையுடை
தங்கிய மாநகு லேசர் வசிக்குந் தலமல்லதே.

வெண்பா.

சோழன் மகட்கருளுந் துங்கநகு லேச்சுரம்போல்
ஈழத்தில் வேறுதல மில்லையில்லை!—பாழுடலைக்
காத்துநிதி தேடுங் கயவர்களே! நம்பொருளீர
தேத்திடுமி னேத்திடுமின்! இன்று.

கட்டளைக்கலித்துறை.

சாகர சங்கம புண்ணிய தீர்த்திகை சத்திசிவம்
ஆகிய ரூப மதற்கய லோர்சிவ னாலயமும்
நாக வளங்களு மாக விளங்கிடு நல்லதலம்
மாகதி காட்டிடு முக்கிய க்ஷேத்திர மற்றதுவே.

கட்டளைக்கலிப்பா.

சீரி மாமலை வாரிதி யாடியே
கீரீச னாநகு லேசனை நாடியே
சேரு மன்பொடு சிந்தனை செய்துமேற்
றிசைகொ ளுக்கிர சோழரா சன்மகள்
மாரு தப்பிர வல்லியென் பேரினள்
வாவு வெம்பரி மாமுக மோடுநோய்
திரநீங்கின ளித்தலத் தேயெனிற்.
செப்ப லங்கையி லொப்பிதற் கில்லையே.

[illegible] கீரிமலைச் சிவன்கோயிற் சிறப்பு.

வெண்பா.

[illegible] நிலைபொன்று தேடு மனுடர்களே
[illegible] நிலையாது செல்பொழுது — அல்லதூஉ [illegible]
[illegible] நிலைபுண்[illegible] தாட [illegible]ருகு மலைச்சரத்திர
[illegible] பணிது.

விருத்தம்.

தெய்வமதாமுக கீரிமலைச் சிவன்கோயிற் றிருப்பணி
[illegible] பொருட்—ஆவலொடும் படைபோருள்கள
[illegible] வார்த்திடமசே யகங்கொண்டேரும்—பூ
[illegible] பாவனிலைத பொருந்து லாம்பிளைகயைப் பு
[illegible] தான்—சேவடியாம் பெருவாழ்விற [illegible]
[illegible] இணைமனந்தானே.

வெண்பா.

[illegible] சிவிதருந மாதிருகுலேசபிரான
[illegible] பொ[illegible] மலர்ச் சேவடியே— [illegible]
[illegible] பா குவ தன்றீது தொல்லுயிருக குறற
[illegible] செல்வத்து சொல்

விருத்தப்.

[illegible] மேருவரைச் சிகரமென்றுட்
[illegible] நமிரு சிகரமதாய்த் திகழு மீழத்
[illegible] முகமெனும்யாழ்ப் பாணந் தன்னில்
[illegible] திரதத்துற கீரிமலை யுறைந்து நாளும
[illegible] நகுலேச ரருளே கொண்டு
மெய்யவங் கவர்கோயில் விளங்க வாய்த்த
திருப்பணிகள் செய்பவருஞ் செய்விப் போரும
திரவியங்க ளீபவருஞ் சிறந்து வாழி.

வெண்பா.

[illegible] முனி யாதியர்க்குச் செய்கருணை
[illegible] மிசையுமோ—[illegible]
[illegible]

மஹாமஹோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்